15th March 1960]

MR. A. A. RASHEED : Is it a fact that the scheme submitted by the private employer as far back as twelve months ago has yet to be sanctioned?

THE HON. SRI R. VENKATARAMAN : Now the authority to sanction has been transferred to the State Government. I do not think there will be any further delay.

Sea erosion in North Madras

* 388 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have sanctioned the scheme for the construction of stone revetment in North Madras area to prevent sea erosion?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : இந்தத் திட்டம் எப்பொழுது சாங்ஷன் செய்யப்பட்டது? எப்பொழுது கட்டப்படும்? இவ்வளவு காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம்?

THE HON. SRI P. KAKKAN : இந்தத் திட்டம் நான்கு வருஷத் தவணைக்குள் கட்டப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஐந்து லட்ச ரூபாய் கடனை கார்ப்பரேஷனுக்கு அரசாங்கம் கொடுத்திருக்கிறது. 3,500 அடி நீளத்திற்குச் சுவர் கட்ட வேண்டும். இதுவரையில் 250 அடி நீளம் கட்டியிருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கடலரிப்பைத் தடுக்க நகராண்மைக் கழகத்திற்கு ஐந்து லட்ச ரூபாய் கடன் தருவதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறார்கள். இதற்காக உதவித் தொகை அளிப்பது அரசாங்கத்தின் கடமை அல்லவா? உதவித் தொகை எவ்வளவு அளிக்கிறார்கள்?

THE HON. SRI P. KAKKAN : உதவித் தொகை என்பது இப்பொழுது பிரச்னை அல்ல. கடலரிப்பைத் தடுக்க சுவர் கட்ட வேண்டுமென்று அரசாங்கமும் கார்ப்பரேஷனும் திட்டமிட்டது. வேலை நடப்பதற்காக ஐந்து லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறோம். அவர்கள் எவ்வளவு ஈவு செலவு செய்யவேண்டும், அரசாங்கம் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பது பரிசீலனைக்குப்பின்னால் தான் முடிவு செய்யப்படும்.

SRI A. VEDARATHNAM : இதுமாதிரி கடலரிப்பு இம் மாகாணத்தில் வேறு பகுதிகளில் ஏற்பட்டிருப்பதைத் தடுக்கவும் அரசாங்கம் இதுமாதிரி ஏதேனும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா? அதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டதா?

THE HON. SRI P. KAKKAN : எங்கு கடலரிப்பு ஏற்பட்டாலும் அதைத் தடுக்க அரசாங்கம் யத்தனிக்கும்.

SRI A. GOVINDASAMY : இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்கு மத்திய அரசாங்க நிதி ஏதாவது உண்டா?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

[15th March 1960

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் மணப்பாடு என்னும் இடத்தில் கடலரிப்பு ஏராளமாக ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க என்ன நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : நடவடிக்கை எடுத்திருக்கிறது. அங்கு கடல் அரிப்பைத் தடுப்பது, அங்குள்ள மக்களை பக்கத்தில் கொண்டுசேர்ப்பதற்கு வீடு கட்டிக் கொடுப்பது போன்றவை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : தனுஷ்கோடி பக்கத்தில் வருஷா வருஷம் கடல் உள்ளே வருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி பல இடங்களில் இருப்பதால் இதற்கென்று ஒரு திட்டம் போட்டு, கடலரிப்பைத் தடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா ? கொஞ்ச வருஷத்திற்கு முந்தி கோயில் உள்ளேயே தண்ணீர் வந்திருப்பதையும் பார்த்தோம். அங்குள்ள பகுதிகளில் ஒவ்வொரு சதுரமாக மூழ்கிக்கொண்டு வருகின்றன. எல்லாவற்றுக்கும் சேர்த்து ப்ளான் போட்டு நடவடிக்கை எடுக்க முடியுமா ? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது உதவித் தொகை கிடைக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : தனுஷ்கோடியில் ஏற்பட்டிருக்கும் கடலரிப்பைத் தடுக்க வேண்டுமென்று அரசாங்கம் யத்தனித்து, மத்திய சர்க்காரிடமும் தெரிவித்திருக்கிறது. தனுஷ்கோடியில் ஏற்படும் கடலரிப்பைப் பரிசீலனை செய்யும்படி சொன்னதில், அவர்கள் இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்றால், அங்கே விரைவில் வரக்கூடிய மரங்களை, இடை இடையே தென்னைமரங்களை நடவேண்டுமென்றும், ரயில்வேயிலிருந்து கிடைக்கும் கழிவு நிலக்கரியைப் போட்டுப் பார்க்கவேண்டுமென்றும், அதுவும் முடியாவிட்டால், பூனாவிலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் கடலரிப்பைத் தடுக்கக்கூடிய முறைகளைப் பரிசீலனை செய்து முடிவு தெரிவிக்க இந்த அரசாங்கம் அங்கு எழுதி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்றும் சொல்கிறார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : இதை சர்க்காரோ, கார்ப்பரேஷனோ எப்பொழுது ஆரம்பித்து எப்பொழுது முடிப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : 1962-ம் ஆண்டுக்குள்ளே இதை முடிக்கவேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

SRI V. SUBBIAH : கடல் பிரதேசமே பக்கத்தில் இல்லாத நடுவாந்தர கிராமங்களில் பலவற்றுக்கு ஆறுகளில் வெள்ளம் வருவதன் மூலமாக பாதகம் ஏற்படுகிறது. வெள்ளக் கொடுமையினால் பல கிராமங்கள் அழித்துக்கொண்டு போகப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கெல்லாம் என்ன பாதுகாப்பு அரசாங்கம் செய்யப் போகிறார்கள் ?

(பதில் இல்லை.)